www.StudyGuideIndia.com

**1501**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : $4 \times 2 = 8$

1. நாமக்கல் கவிஞரை 'மாநில அரசும், நடுவணரசும்' எவ்வாறு பெருமைப்படுத்தின ?

2. கடலின் பெரியது எது ?

3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை ?

4. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.

5. பாரதியார் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

6. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை ?

[ Turn over

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

8. நற்றாய் காக்கைக்குப் பராய்க் கடன் உரைத்தவாற்றைப் புலப்படுத்துக.

9. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

10. தாவீதன் கோலியாத்திற்கு உரைத்த மறுமொழி யாது ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டினாள் ?

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: 3 × 4 = 12

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகள் யாவை ?

13. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை ?

14. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

15. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

16. "நாயினேன் மறந்தென்னினைக் கேனே" என்று சுந்தரர் உருகுமாற்றினை விளக்குக.

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'செய்ந்நன்றியறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. அனுமன் சீதையைக் கண்டுவந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் எழுதுக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

www.StudyGuideIndia.com

25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2 = 6$

அ) *அறைந்தறைந்து* ஆ) *தழீஇக்* கொள்ள

இ) *வையகமும் வானகமும்* ஈ) *வைவேல்*

உ) *அவியா* மதிவிளக்கு ஊ) *நெடுந்தகை.*

26. பின்வருவனவற்றில் எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) செங்கோல் ஆ) தென்கரை இ) உயிருண்டு

ஈ) கற்கோடி உ) தீக்குச்சி ஊ) பூஞ்சோலை.

27. சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

பொதுவியல் திணை *அல்லது* வரைவுகடாதல் துறை.

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

— இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக. $1 \times 4 = 4$

***அல்லது***

உவமையணி *அல்லது* எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக.

VIII. பொருத்துக. $4 \times 1 = 4$

| | **திணை** | | **பாடியோர்** |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | — | ஓரம்போகியார் |
| 30. | முல்லை | — | அம்மூவனார் |
| 31. | மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. | நெய்தல் | — | கபிலர் |
| | | — | பேயனார். |

www.StudyGuideIndia.com

V. பின்வரும் செய்யுள் வரிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக: $4 \times 1 = 4$

20. ''நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்ம நாம் முன்னிய வினையே''

அ) இஃது யார் யாரிடம் கூறியது ?

ஆ) இவ்வரிகள் அமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

இ) இச்செய்யுள் எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

ஈ) வலவ - என்பதன் பொருள் யாது ?

*அல்லது*

21. ''எதிர்ந்த அவ்வரக்கனை வென்றால்
ஆங்கு நான் அவற்கு என் மகள் அளிக்குவென்''

அ) இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது ?

ஆ) அரக்கனின் பெயர் யாது ?

இ) நூலின் ஆசிரியர் யார் ?

ஈ) நான் - என்பது இவ்வரிகளில் யாரைக் குறித்தது ?

VI. 22. ''ஒன்றே யென்னின்'' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையைக் குறிப்பிடுக. $4 + 2 = 6$

23. ''அஞ்சுவ'' எனத் தொடங்கும் குறளையும், ''மகற்கு'' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. பின்வருவனவற்றுள் எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) செய்க ஆ) காண்பன் இ) புக்கேன்

ஈ) அறைதல் உ) ஓம்புமின் ஊ) கேட்டாள்.



www.StudyGuideIndia.com

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16 × 1 = 16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்.

அ) சிவன்

ஆ) திருமால்

இ) முருகன்.

34. புறநானூற்றின் திணைகள்

அ) ஐந்து

ஆ) பதினொன்று

இ) பத்து.

35. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

அ) குறிஞ்சிப்பாட்டு

ஆ) முல்லைப்பாட்டு

இ) பரிபாடல்.

36. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவ மாலை

இ) நாலடியார்.

37. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள்

அ) மூன்று

ஆ) ஆறு

இ) முப்பது.

[ Turn over

www.StudyGuideIndia.com

38. 'சுந்தரன்' என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர்

அ) அனுமன்

ஆ) இராவணன்

இ) இலக்குவன்.

39. வீரமாமுனிவரின் தாய்நாடு

அ) தமிழகம்

ஆ) பிரான்சு

இ) இத்தாலி.

40. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்

அ) மதுரைக்கலம்பகம்

ஆ) நந்திக்கலம்பகம்

இ) காசிக்கலம்பகம்.

41. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

அ) தேன் மழை

ஆ) குயில்

இ) தென்றல்.

42. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) நாமக்கல் கவிஞர்.

www.StudyGuideIndia.com

43. உவமைக் கவிஞர் எனப் பாராட்டப்பட்டவர்

அ) சுப்பிரமணிய பாரதி

ஆ) சுரதா

இ) கண்ணதாசன்.

44. கவிஞர் ஏறு, பாவலர் மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர்

அ) கவிஞர் சுரதா

ஆ) வாணிதாசன்

இ) முடியரசன்.

45. கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்பட்டவர்

அ) கம்பர்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை.

46. குறுந்தொகைக்கு கடவுள்வாழ்த்துப் பாடியவர்

அ) பெருந்தேவனார்

ஆ) வரந்தருவார்

இ) கபிலர்.



www.StudyGuideIndia.com

47. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்ஷசன் என்றெல்லாம் புகழப்படுபவர்

அ) கம்பர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

48. திவ்விய பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர்

அ) அடியார்க்கு நல்லார்

ஆ) அரும்பத உரைகாரர்

இ) பெரியவாச்சான் பிள்ளை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. பயன்தூக்கார் செய்த ................ நயன்தூக்கின்

நன்மை ................ பெரிது.

50. எப்பொருள் ................ கேட்பினும் அப்பொருள்

................ காண்பு தறிவு.

www.StudyGuideIndia.com